பக்கங்கள்:-21

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 16 | செவ்வாய்க்கிழமை | 28.01.2025 | அதிர்வு 179 |
|---|---|---|---|---|---|

## திருமலையில் மீனவர் ஒருவர் சடலமாக மீட்பு!

### இருவர் சந்தேகத்தில் கைது

திருகோணமலை, ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள இலங்கைத்துறை, முகத்து வாரம் களப்புக் கடலுக்கு 05

### கலைப்பீட பீடாதிபதி ரகுராம் பதவி விலகல் எதிரொலி

## யாழ். பல்கலை விரிவுரையாளர்கள் இன்று முதல் காலவரையின்றி பணிப்புறக்கணிப்புப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இன்று செவ்வாய்க் கிழமை முதல் காலவரையின்றி விரிவுரைகளைப் புறக்கணிக்கத் தீர் மானித்துள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அவசர கலந்துரையாடலுக்குப் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்ட யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் முழு வடிவம் வருமாறு:- 07




## சிவமோகனை இடைநிறுத்தியமைக்கு இடைக்காலத் தடை விதிக்க முடியாது

### கைவிரித்தது யாழ். மாவட்ட நீதிமன்றம்



**இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்து தம்மை இடைநிறுத்தி எடுக்கப்பட்ட தீர்மானத் துக்கு இடைக்காலத் தடை விதிக்கும்படி கோரி அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் மருத்துவர் சி.சிவமோகன் சார்பில் தாக் கல் செய்யப்பட்ட வழக்கை ஆராய்ந்த யாழ்ப் பாணம் மாவட்ட நீதிமன்றம் அத்தகைய இடைக் காலத் தடை விதிக்க முடியாது என்று உத்தர விட்டுள்ளது.** 05

## தாயகத்தில் போதைக்கு எதிராக மிகப் பெரிய செயற்பாட்டை முன்னெடுக்க அணிதிரளுங்கள்

### பதவி விலகிய கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் அறைகூவல்




(எஸ்.நிதர்சன்)

தமிழர் தாயகத்தில் இளம் சமுதா யத்தை நாசமாக்கக் கூடிய போதைப் பாவனையைத் தடுத்து நிறுத்தி ஓர் ஆரோக்கியான சமுதாயத்தை உரு வாக்க நாம் அனைவரும் இந்தக் காலப் பொறுப்பை கைகளில் ஏந்த வேண்டும் என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் பேராசியர் சி.ரகுராம் அறைகூவல் விடுத்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக் கையில்,

"யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியிலான போதைப் பாவனை யைத் தடுத்து நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளவனாக, பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர்கள் ஆரம்பித் துள்ள போதைக்கு எதிரான 06




வடக்கின் நீண்டகால முக்கிய அரசியல்வாதி ஒருவரின் தனிப்பட்ட உதவியாளராக – எடுபிடி போல – கடந்த சில வருடங்களாகச் செயல்பட்டு வருகின்ற இளைஞர் ஒருவர் ஓரிரு தினங்க ளுக்கு முன்னர் யாழ்ப்பாணம் நகரத்தில் வைத்து ஒரு தொகை ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் வசமாகப் பொலிஸாரிடம் சிக்கி இருக்கின்றார் என்று தகவல் வெளியாகி இருக்கின்றது.

அதிரடிப்படையினர் திடீரென சுற்றிவளைத்து இந்த இளைஞரை கைது செய்திருக்கின்றனர். தமக்கு கிடைத்த உளவுத் தகவல் ஒன்றின் அடிப் படையிலேயே இந்த அதிரடி நடவடிக்கையை அவர்கள் எடுத்தனர் என்றும் கூறப்பட்டது.

இப்போது அந்த இளைஞர் நீதிமன்ற அனு மதியுடன் பொலிஸ் காவலில் மூன்று நாள்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றார்.

மேற்படி அரசியல் தலைவருடன் தாம் சேர்ந்து கொழும்புக்கு வாகனத்தில் சென்று வருபவர் என்றும், அப்படி அந்த அரசியல் 05

# வேலையற்ற பட்டதாரிகள் தனியார் துறையிலும் வேலைவாய்ப்புக்களைப் பெற முன்வரவேண்டும்

## ஓய்வூதியம் வேண்டும் என்பதற்காக அரச துறையை மட்டும் நம்பியிருக்காதீர்கள் என்று தொழில் அமைச்சர் அறிவுறுத்து



"ஓய்வூதியம் வேண்டும் என்பதற்காகப் பட்டதாரிகள் பலர் அரச துறையில் வேலைவாய்ப்பைக் கோரி நிற்கின்றனர். இதற்காகச் சில இடங்களில் பட்டதாரிகள் வீதிகளில் இறங்கிக் கூடப் போராடுகின்றனர். தம்மை வேலையற்ற பட்டதாரிகள் என்று அடையாளப்படுத்தும் அவர்கள், முதலில் தனியார் துறையில் குவிந்திருக்கும் வேலைவாய்ப்புக்களைப் பெற முன்வரவேண்டும்."

– இவ்வாறு தொழில் அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டில் இளையோர் அனைவருக்கும் வேலைவாய்ப்புக் கிடைக்க வேண்டும். அவர்கள் அரச, தனியார் துறைகளில் வேலை செய்ய வேண்டும். இதில் அரசு உறுதியான நிலைப்பாட்டில் இருக்கின்றது. ஆனால், அரச துறையில் மாத்திரம் வேலைவாய்ப்பு வேண்டும் என்று கோரி இளைஞர், யுவதிகள் பிடிவாதமாக இருக்கக்கூடாது. அனைவருக்கும் அரச துறையில் வேலைவாய்ப்பு இல்லை. தனியார் துறைகளில் அதிகமான வேலைவாய்ப்புக்கள் காத்திருக்கின்றன.

எனவே, இன்றைய இளையோர் தனியார் துறையிலும் வேலை செய்ய முன்வரவேண்டும். ஓய்வூதியம் வேண்டும் என்பதற்காகப் பட்டதாரிகள் பலர் அரச துறையில் வேலை வாய்ப்பைக் கோரி நிற்கின்றனர். இதற்காகச் சில இடங்களில் பட்டதாரிகள் வீதிகளில் இறங்கிக் கூடப் போராடுகின்றனர்.

தம்மை வேலையற்ற பட்டதாரிகள் என்று அடையாளப் படுத்தும் அவர்கள், முதலில் தனியார் துறையில் குவிந்திருக்கும் வேலைவாய்ப்புக்களைப் பெற முன்வரவேண்டும். அதைவிடுத்து வீதிகளில் இறங்கிப் போராடுவதில் என்ன நியாயம் இருக்கின்றது? படித்தவர்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும். அனைவருக்கும் அரச துறையில் வேலை கிடைக்கும் என்று நம்பியிருக்கக்கூடாது." – என்றார்.

# சுதந்திர தினத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்துத் திட்டம்



சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பில் விசேட போக்குவரத்துத் திட்டத்தை செயல்படுத்த கொழும்பு போக்குவரத்து பிரிவு தீர்மானித்துள்ளது.

சுதந்திர தினத்திற்கான ஒத்திகை நிகழ்ச்சிகள் நாளை முதல் 2 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

அந்த நாள்களில் காலை 6 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சில வீதிகளை போக்குவரத்துக்காக மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட போக்குவரத்து திட்டத்திற்கு அமைய மேற்குறிப்பிடப்பட்ட திகதிகளில் மூடப்படவுள்ள வீதிகளின் விபரம் பின்வருமாறு,

கருவாத்தோட்டம் விஜேயராம மாவத்தையில் கல்லூரி மாவத்தை திசைக்கு நுழைதல்,

கருவாத்தோட்டம் பௌத்தாலோக்க மாவத்தையில் இருந்து மெட்டிலன்ட் பிரதேசத்திற்கு நுழைதல்,

கருவாத்தோட்டம் பௌத்தாலோக்க மாவத்தையில் இருந்து பிரேம கீர்த்தி டி அல்விஸ் மாவத்தை திசைக்கு நுழைதல்,

கருவாத்தோட்டம் ஸ்டென்லி விஜயசுந்தர மாவத்தையில் இருந்து இலங்கை மன்றக்கல்லூரி வீதி திசைக்கு நுழைதல்,

கருவாத்தோட்டம் சுதந்திர சதுக்க சுற்றுவட்டத்திலிருந்து சுதந்திர சதுக்க திசைக்கு நுழைதல்.

இந்த வீதிகள் ஒத்திகை இடம்பெறும் காலப்பகுதியில் தற்காலிகமாக மூடப்படவுள்ளன.

எவ்வாறாயினும் அந்த பிரதேசங்களுக்குள் இயங்கும் அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு செல்லும் வாகனங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படவுள்ளன.



## வடக்கு மாகாணத்தில்

# ஆண்களுக்கு நிகராக பெண்களும் உயிர்கொல்லி போதைக்கு அடிமை

## ஆளுநர் வேதநாயகன் அதிர்ச்சித் தகவல்

"வடக்கு மாகாணத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் உயிர்கொல்லி போதைப் பாவனைக்கு இலக்காகி இருக்கின்றார்கள். எமது இளைய சமூகம் எங்கே போய்க் கொண்டிருக்கின்றது? இது ஆபத்தான நிலைமை. இதனைத் தடுப்பதற்கு இளையோர்களின் ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் செலவிடும் தளங்கள் தேவை. அதற்கான வசதிகளை நாம் ஏற்படுத்திக் கொடுக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் புனரமைக்கப்பட்டு கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த இளங்கலைஞர் மன்றத்தின் நிறுவுநர் பொன்.சுந்தரலிங்கம், இளங்கலைஞர்களின் வளர்ச்சிக்காக இரவும் பகலும் சிந்திக்கும் ஒருவர். இன்று புலம்பெயர்ந்திருந்தாலும் எமது மண்ணைப்பற்றி நினைத்துக்கொண்டு இந்த மண்ணின் முன்னேற்றத்துக்காகச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்.

புலம்பெயர்ந்து சென்ற சிலர் எமது ஊரை மறந்து இருக்கின்றார்கள். ஆனால், சுந்தரலிங்கத்தைப் போன்றவர்களால் எமது மண் பெருமை கொள்கின்றது.

இப்போது இசை விழாக்கள் அல்லது பொதுவான நிகழ்வுகளுக்கு ஆட்கள் வருவது மிகக் குறைவு. இன்று இந்த மண்டபம் நிறைந்திருப்பதைப் போல எதிர்காலத்திலும் இருக்கவேண்டும்.

இன்றைய இளையோரின் சிந்தனை திசை திருப்பப்படுகின்றது. அவர்கள் தங்கள் ஓய்வு நேரங்களை எவ்வாறு செலவிட வேண்டும் என்பது தெரியாது. அவர்கள் தவறான வழிக்கு வழிப்படுத்தப்படுகின்றார்கள்.

வடக்கு மாகாணத்துக்கான புனர்வாழ்வு நிலையம் அமைப்பது தொடர்பில் என்னுடன் கலந்துரையாடினார்கள். அதற்குப் பொறுப்பானவர்கள் தங்களுக்கு இரண்டு இடங்கள் தேவை எனக் கேட்டார்கள்.

ஏன் இரண்டு இடங்கள் தேவை என அவர்களிடம் நான் கேட்டேன். ஆண்களுக்கும், பெண்களுக்கும் தேவை எனச் சொன்னார்கள். பெண்களுக்கும் புனர்வாழ்வு நிலையம் தேவையா எனக் கேட்டேன்.

இப்போது ஆண்களுக்கு நிகராக பெண்களும் உயிர்கொல்லி போதைப் பாவனைக்கு இலக்காகி இருக்கின்றார்கள் எனச் சொன்னார்கள். மிக மனவேதனையான விடயம். எமது இளைய சமூகம் எங்கே போய்க் கொண்டிருக்கின்றது? இது ஆபத்தான நிலைமை. இதனைத் தடுப்பதற்கு இளையோர்களின் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் செலவிடும் தளங்கள் தேவை. அதற்கான வசதிகளை நாம் ஏற்படுத்திக் கொடுக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்." – என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், இளங்கலைஞர் மன்றத்தின் காப்பாளரும் சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமான செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், இளங்கலைஞர் மன்றத்தின் நிறுவுநர் பொன்.சுந்தரலிங்கம், இசைவாணர் கண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





# உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான மனுக்கள் மீதான விசாரணை முடிவுக்கு

உள்ளூராட்சி மன்ற தேர்தல் விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசமைப்பிற்கு முரணானவை என தீர்ப்பளிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணையை முடிவுறுத்தியுள்ளதாக உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, உயர்நீதிமன்றின் இரகசிய வியாக்கியானம் ஜனாதிபதி மற்றும் சபாநாயகருக்கு அனுப்பப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாள்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற விசாரணையை நிறைவு செய்து உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் நிஸாம் காரியப்பர் உள்ளிட்ட நான்கு தரப்பினர் இந்த மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

# நாட்டில் இன்று முதல் சில நாள்களுக்கு மழை



இன்று முதல் எதிர்வரும் சில நாள்களுக்கு வடக்கு, வட மத்திய, கிழக்கு, ஊவா, தென் மற்றும் மத்திய மாகாணங்களில் மழை நிலைமை அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பிற்பகல் அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

அத்துடன், நாட்டின் தென்மேற்குப் பகுதியில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவருடன் வாகனத்தில் வந்த சமயமே இந்தப் போதைப் பொருள்களைத் தான் கொழும்பிலிருந்து இங்கு கொண்டு வந்தார் எனவும் அந்த உதவியாளர் பொலிஸாருக்குக் கொடுத்த வாக்குமூலத்தில் தெரிவித்திருக்கிறார் எனவும் அறிய வந்தது.

மேற்படி இளைஞரின் சகோதரரும் கூட அந்த அரசியல்வாதியின் அணியில் செயற்பட்டவர் என்றும், அவருக்கு எதிராகவும் ஏற்கனவே இதுபோன்ற சில குற்றச்சாட்டுகள் இருந்தன என்றும் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தை அடுத்து மேற்படி இளைஞரின் சகோதரரையும் சம்பந்தப்பட்ட அரசியல்வாதி தமது பக்கத்திலிருந்து துரத்தி விட்டார் என்றும் கூறப்பட்டது.

பாவம், அந்த அரசியல்வாதி. தமக்கு பக்கத்தில் இருப்பவர்களின் தவறுகளுக்காக தமது அரசியலைப் பலி கொடுத்து வருகின்றார் என்பதுதான் வேதனையான விடயம்.

+ + +

இலங்கைத் தமிழரசு கட்சியின் மத்திய குழு வரும் 8 ஆம் திகதி மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் கூடவிருக்கின்றது.

ஏனைய தமிழ்க் கட்சிகளோடு பேசுவது போன்ற விடயங்களை கையாள்வதற்காக தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவினால் நியமிக்கப்பட்ட ஏழு பிரதிநிதிகளை கொண்ட குழு பெரும்பாலும் மட்டக்களப்பு கூட்டத்தின் போதுதான் தனித்துச் சந்தித்து நிலைமைகளை ஆராயும் எனத் தெரிகின்றது.

புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் நாடாளுமன்றத்தில் ஒன்றுபட்டு செயல்படுவதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்வதற்காக தமிழரசு கட்சிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விடுத்திருக்கும் பேச்சுக்கான அழைப்பு குறித்து மேற்படி ஏழு பேர் கொண்ட குழு பெரும்பாலும் எட்டாம் திகதி அளவிலேயே கூடக் கூடிய - ஆராயக் கூடிய - வாய்ப்பு இருப்பதாகத் தெரிகின்றது.

அந்த விடயத்தை தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தொலைபேசி மூலம் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு தெரியப்படுத்தியுள்ளார். அத்தோடு அதனை வெளிப்படுத்தும் பதிலை சிவஞானம் விரைவில் எழுத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு எழுத்தில் அனுப்பி வைப்பார் என்றும் தெரிகிறது.

அதற்கு முன்னர் தேவையானால் அந்த விடயம் குறித்து ஏனைய தமிழ் கட்சிகளுடன் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமது முடிவில் பேச்சு நடத்தலாம் என்றும் சிவஞானம் கஜேந்திரகுமாருக்கு தெரியப்படுத்தியிருக்கிறார்.

தமிழரசு கட்சி தனது முடிவை தெரிவிப்பதை பெப்ரவரி 8ஆம் திகதி வரை தள்ளி போட்டு இருப்பதால் இவ்விடயத்தில் அடுத்த 10 - 12 நாள்களுக்கு எந்த முன்நகர்வுமே இருக்காது என்று ஊகிக்கப்படுகின்றது.

+ + +

இலங்கைத் தமிழரசுக் கட்சியிலிருந்து தாம் இடைநிறுத்தப்பட்டமைக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு விதிக்கக் கோரிய மருத்துவர் சிவமோகனின் விண்ணப்பத்தை யாழ் மாவட்ட நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. தனித்து ஒரு தரப்பு விசாரணையின் போது கூட அத்தகைய உத்தரவை சிவமோகன் தரப்பினால் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

ஏற்கனவே மாவை சேனாதிராஜாவிடமிருந்து கட்சியின் தலைமைப் பதவி பறி போவதைத் தடுப்பதற்கு சிவமோகன் யாழ் மாவட்ட நீதிமன்றம் மூலம் எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை. இப்போது தம்மைக் கட்சியிலிருந்து இடை நிறுத்தியதற்கு எதிரான வழக்கிலும் இடைநிறுத்தத்தை இடைநிறுத்துவதற்கான உத்தரவை அவரால் பெற முடியவில்லை.

அதுமட்டுமல்ல, அந்த வழக்கில் முகப்படையான முகாந்தரத்திலேயே வழக்கிற்கான காரணம் இருப்பதாகத் தெரியவில்லை என்று நீதிபதி தமது உத்தரவில் குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்தக் குறிப்புக்கு மத்தியிலும் இவ் வழக்கைத் தொடர்ந்து கொண்டு நடத்தி, ஏதேனும் இலக்கை சிவமோகன் அடைய வாய்ப்பு இருப்பதாகக் கருதுவதற்கு இடமில்லை.

மாவையின் தலைமைத்துவம் தொடர்பாகத் தாம் தொடுத்த வழக்கை இடைக்கால உத்தரவு கிடைக்காத நிலையில் வாபஸ் பெற்றுக் கொண்ட சிவமோகன, இந்த வழக்கிலும் இடைக்கால உத்தரவு கிடைக்காத ஆதங்கத்தோடு வழக்கை ஆரம்பத்திலேயே அவர் கை வாங்கக் கூடிய நிலைமை இருப்பதாகத் தெரிகிறது.

+ + +

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான புதிய சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களை நிராகரித்து, புதிய வேட்பு மனுக்களை ஏற்று, தேர்தலை விரைந்து நடத்துவதில் அரசு தீவிரமாக இருப்பதாகத் தெரிகிறது.

எப்படியாயினும் தமிழ் -,சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் இந்தத் தேர்தலை நடத்தி முடித்து விட வேண்டும் என்பதில் ஆளும் தரப்பு மிகத் தீவிரமாக இருப்பதாக விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆயினும், உரிய தேர்தல் தொடர்பான சட்ட திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டாலும், அந்தச் சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு மூன்று மாதத்துக்கு உட்பட்ட ஒரு திகதியில் தேர்தலை நடத்தும் தீர்மானத்தை தேர்தல் ஆணையம் எடுக்க முடியும். அத்தகைய அதிகாரம் சட்டத்தின் மூலம் தேர்தல் ஆணையத்துக்கு உண்டு.

அதனால் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, தேர்தலை அவசரப்படாமல், மக்களுக்கு உரிய கால அவகாசம் வழங்கி, புது வருடத்திற்கு பின்னர், அதனை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்தைச் சந்தித்து கோரிக்கை வைக்க எதிர்கட்சிகள் தயாராகின்றன என்று தெரிகின்றது.

மக்கள் நெருக்கடிகளை எதிர் கொண்டு வருகிறார்கள். புது வருடத்தின் போது அவர்களின் நெருக்கடி - குறிப்பாக பொருளாதார சிக்கல் - பெரும் பாதிப்பாக அவர்களுக்கு அமையும் என்று கூறப்படுகின்றது.

புது வருடத்தை நெருக்கடியோடு எதிர்கொண்ட பின்னர், மக்கள் வாக்களிக்க போனால் ஆளுங்கட்சி பெரும் பின்னடைவை காணும் என்று எதிர்கட்சிகள் கருதுகின்றன.

அதனால் தேர்தலை நடத்தும் திகதியை தீர்மானிப்பதற்கு தேர்தல் ஆணையத்துக்கு வழங்கப்பட்டுள்ள மூன்று மாத கால அவகாசத்தை சரியானபடி பயன்படுத்தி, அவசரமாகத் தேர்தலை நடத்துவதை தவிர்த்து வருடப் பிறப்புக்கு பின்னர் அதை மேற்கொள்ளும்படி எதிர்க்கட்சிகள் தேர்தல் ஆணையத்தை கோரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சோழியன் குடுமி சும்மா ஆடுவதில்லை அல்லவா...?

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் காணாமல்போயிருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

நேற்றுமுன்தினம் தோணியொன்றில் மீன்பிடிக்கச் சென்ற இலங்கைத்துறை, முகத்துவாரத்தைச் சேர்ந்த வடிவேல் மகேந்திரன் (வயது 53) என்ற மீனவர் கடலில் காணாமல்போயிருந்த நிலையில், அவரது சடலம் நேற்று பிரதேச மீனவர்களால் மீட்கப்பட்டது.

இவர் தோணியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது படகொன்று மோதியிருக்கலாம் என்றும், படகில் வந்தோர் தப்பித்துச் சென்றிருக்கலாம் என்றும், இதனால் தோணி கடலில் புரண்டிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

இந்நிலையில், தோணியில் மோதி விபத்தை ஏற்படுத்தினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் படகில் மீன்பிடியில் ஈடுபட்ட படகோட்டி மற்றும் உதவியாளர் உட்பட இருவரை ஈச்சிலம்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சடலத்தை மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிபதி தஸ்னீம் பௌஸான் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

---

## சிவமோகனை இடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிவமோகனை இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்து இடைநிறுத்தி, அந் நடவடிக்கைகள் தொடர்பாக அவரிடம் இருந்து விளக்கம் கோரும் முடிவைக் கட்சியின் மத்திய குழு அண்மையில் எடுத்திருந்தது.

அதற்கு எதிராக கடந்த 22 ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் சிவமோகன் சார்பில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கில் தமக்கு எதிராக கட்சிக்குள் எடுக்கப்பட்டிருந்த இடைநிறுத்த உத்தரவுக்கு எதிராக இடைக்காலத் தடை விதிக்கும்படி சிவமோகன் கோரியிருந்தார்.

சட்டத்தரணி குருபரனினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் அவர் முன்னிலையாகி நீதிமன்றத்தில் வாதிட்டிருந்தார். ஒரு தரப்பாக சமர்ப்பிக்கப்பட்ட வாதங்களை செவிமடுத்த நீதிபதி எஸ். சதீஸ்கரன் உத்தரவு வழங்குவதை ஒத்தி வைத்திருந்தார்.

உத்தரவு நேற்று வழங்கப்பட்டது. அதில் இடைக்காலத் தடை விதிக்க முடியாது என்று நீதிபதி தெரிவித்திருக்கின்றார்.

வழக்கின் - முகப்படியே - முகாந்திரத்திலேயே - அத்தகைய 07

காணி விற்பனைக்கு

சுழிபுரம் மூளாய் பகுதியில் சுற்று மதிலுடன் 10 பரப்பு காணியில் அமைந்த 4 அறைகள் 2 குளியல் அறைகளுடன் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :-
+94 772378718

# கலைப்பீட பீடாதிபதி ரகுராம் இராஜினாமாவுக்கு தூண்டப்பட்டார்

## அனந்தி சசிதரன் குற்றச்சாட்டு




"கலைப்பீட பீடாதிபதி ரகுராம் இராஜினாமா செய்ய தூண்டப்பட்டுள்ளார். அடுத்த துணைவேந்தராகும் வாய்ப்பு அவருக்கு இருக்கின்றது என்பதால், அவரை அதிலிருந்து அகற்ற வேண்டும் என்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது."

– இவ்வாறு ஈழத் தமிழர் சுயாட்சி கழகத்தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ். பல்கலைக்கழகம் என்பது எமது சமூகத்துக்கான ஒரு மையமாகவே திகழ்கின்றது. பல்கலைக்கழகத்துக்கு கல்வி கற்க செல்கின்ற மாணவர்களை வெறுமனே கல்வியை மாத்திரம் கற்றுவிட்டு வாருங்கள் என்று நாங்கள் அனுப்பவில்லை. பல்கலைக்கழகத்தில் அவர்கள் தங்களது வாழ்வியல் சார்ந்த ஒழுக்கங்களை கற்று வரவேண்டும் என்றே எதிர்பார்த்துள்ளோம்.

பல்கலைக்கழகத்தில் பகிடி வதை என்பது ஒருவரின் மனம் நோகாமலும், அவர்களின் உடல் சார்ந்த துன்புறுத்தல் இல்லாமலும் மேற்கொள்ளவேண்டும். ஆனால் இதற்கு மாறாகவே தற்பொழுது மேற்கொள்ளப்படுகின்றது. கடந்த காலங்களில் இதுதொடர்பாக நாங்கள் அவதானித்து வந்ததுடன், பல விமர்சனங்களையும் முன்வைத்திருந்தோம்.

இந்த மாணவர்கள்தான் எதிர்காலத்தில் ஆசிரியர்களாக, அதிபர்களாக, இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக வருவதற்கான வாய்ப்புகளை கொண்ட ஓர் கல்விச் சமூகம்தான் இந்த பல்கலைக்கழகம்.

இவ்வாறான நிலையில், அண்மையில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி ரகுராம் தன்னுடைய பதவியை இராஜினாமா செய்யும் அளவுக்கு தூண்டப்பட்டுள்ளார். இது ஒரு வருத்தத்துக்குரிய விடயம். இது இன்று நேற்று அல்ல. கடந்த காலத்தில் இராணுவ புலனாய்வாளர்களின் தூண்டுதலில் விரிவுரையாளராக கடமையாற்றிய குருபரன் பதவி நீக்கப்பட்டார். அதனை இந்த இடத்தில் நினைவு மீட்டிக் கொள்ள வேண்டும்.

அவர் இருந்த காலத்தில் பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகம், வன்முறைகள் செய்ய முடியாத அளவுக்கு அவர் நியாயமான செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தார். அவர் வெளியேற்றப்பட்ட பின்னர் பல்கலைக்கழக தரப்பில் எந்தவித எதிர்வினையும் ஆற்றப்படவில்லை என்பது குறையாக உள்ளது.

எமது பிள்ளைகள் நல்ல சமூகமாய் உருவாகுவதற்கு குருபரன் போன்ற விரிவுரையாளர்கள் பல்கலைக்கழகத்தில் இருக்க வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாக உள்ளது. இலங்கை அரசினதும் புலனாய்வாளர்களினதும் திட்டத்தால் அவர் நீக்கப்பட்டார்.

அதேபோல், இப்பொழுது கலைப்பீட பீடாதிபதி ரகுராம் இராஜினாமா செய்துள்ள விடயம், அடுத்த துணைவேந்தராகும் வாய்ப்பு அவருக்கு இருக்கின்றது என்பதால், அவரை இதிலிருந்து அகற்ற வேண்டும் என்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் சிறந்த முறையில் தனது பணிகளை ரகுராம் மேற்கொண்டிருந்தார். நாங்கள் கூட பகிடிவதை தொடர்பான விடயங்களை அவரிடம் முன்வைக்கும்போது அவர் அதற்கான தீர்வுகளை பெற்றுத்தந்தார். தற்போதைய துணைவேந்தருடன் எதுவுமே பேசமுடியாத நிலைதான் காணப்படுகின்றது. அவரது உலகம் வேறாகவே காணப்படுகின்றது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வெறுமனே மதம் சார்ந்த கூட்டங்களில் அறம் சார்ந்து மாத்திரம் பேசுகிறார். அறம் சார்ந்து சிந்திப்பதில்லை. பெண்கள் விரிவுரையாளர்களாக வரக்கூடாது என்பதில் அவர் உறுதியாக உள்ளார்.

இந்த நிலையில், அடுத்த துணைவேந்தராக இள வயதில் வந்துவிடுவாரோ என்ற பயத்தில், இவ்வாறான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் முறைதவறி போவதை கண்டித்தார் என்பதற்காக, அவரை பதவி விலக தூண்டுவது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. நாங்கள் இதை வன்மையாக கண்டிக்கின்றோம்." – என்றார்.

---

## தாயகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆதரவு கொடுப்பவனாக சமூகத்திடம் தாழ்மையான வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன்.

போதைப் பாவனை எமது சமூகத்தை எல்லா விதத்திலும் பாதித்துள்ளது. பல்கலைக்கழகம் மாத்திரமல்ல, பாடசாலைகள், சமூக நிறுவனங்கள் என ஊடுருவியுள்ள போதைப் பாவனை எங்களுடைய சக்தி மிகு இளம் சமுதாயத்தைச் சீரழித்து வருகின்றது.

இந்தப் போதைப் பாவனை சுயமாக சிந்திக்கக் கூடிய எங்கள் இளம் சமுதாயத்தை மிக அசிங்கமான வழியில் சீரழித்துக்கொண்டு இருக்கின்றது.

போதைப் பாவனையை ஊக்கப்படுத்தும் முயற்சிகளுக்கு எதிராக, அதனை எதிர்த்து நிற்கும் மிகப் பெரிய சமூக பொறுப்பு எங்களுக்கு இருப்பதாகக் கருதுகின்றேன்.

சக்திமிக்க , உலகத்தையே மாற்றியமைக்கக் கூடிய மாணவ சமுதாயம் போதைப்பொருளுக்கு அடிமையாகி வருகின்றனர். பாடசாலைகள் இந்தப் போதைப் பாவனையைத் தடுத்து நிறுத்த முடியாமல் திகைத்து நிற்கின்றன.

இந்த மண் இளம் குருத்துக்களை போதைப் பாவனை அற்ற சமூகமாக உருவாக்கி நின்ற மண்.

இன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர்கள் ஆரம்பித்துள்ள போதைக்கு எதிரான போராட்டம், ஒரு சமூகப் போராட்டமாக உருவாக வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு பாடசாலைகளிலும் சமூகத்தைப் பற்றி சிந்திக்கக் கூடியவர்கள் இந்தத் தருணத்தை எங்களுக்காக ஒதுக்கி, இளம் சமுதாயத்தை நாசமாக்கக் கூடிய போதைப் பாவனையைத் தடுத்து நிறுத்தி ஓர் ஆரோக்கியான சமுதாயத்தை உருவாக்கக் காலப் பொறுப்பை கைகளில் ஏந்த வேண்டும்.

தனி நபராக – சமூகமாக இந்தக் காலப் பொறுப்பைப் பற்றி சிந்தியுங்கள். போதைக்கு எதிராக மிகப் பெரிய செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டிய கால கட்டமாகும்.

உங்களுடைய ஒவ்வொரு பிள்ளைகளையும் இந்தப் போதைப் பழக்கத்தில் இருந்து விடுவித்து, எங்கள் சமூகத்தை ஆரோக்கியமான சமூகமாக்கத் திடசங்கற்பம் பூணுவோம்."

– என்றார்.

# இந்திய மீனவர்கள் 8 பேர் இன்று அதிகாலை கைது!



**(ந.லோகதயாளன்)**

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்த 8 இந்திய மீனவர்கள் இன்று அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தைச் சேர்ந்த 8 மீனவர்கள் ஒரு படகில் யாழ்ப்பாணம் கடற்பரப்புக்குள் ஊடுருவி மீன்பிடியில் ஈடுபட்ட சமயமே கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் இன்று காலை யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

அதன்பின்னர் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"அண்மையில் இடம்பெற்ற யாழ். பல்கலைக்கழகத்தின் பேரவைக் கூட்டத்தின் பின்னர் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பீடாதிபதி தனது பதவியை இராஜினாமா செய்தார்.

அவரின் இராஜினாமாவை அடுத்துப் பல்கலைக்கழகம் பற்றிய பல கருத்துக்கள் ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் வெளியாகி இருந்தன. இந்த நிலையில் நிலைமை குறித்து கலந்துரையாடும் வகையில் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் விசேட பொதுக்குழுக் கூட்டம் இன்று (நேற்று) திங்கட்கிழமை காலை 10 மணிக்குக் கலைப்பீடத்தில் இடம்பெற்றது.

மீறல்களிலும், வன்முறைகளிலும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைப் பாதிக்கும் வகையிலும், உடைமைச் சேதங்களை விளைவிப்பதிலும் சீரழிவு மிக்க நடவடிக்கைகளிலும் ஈடுபடும் மாணவர்களுக்கு எதிராகப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் கடந்த காலத்திலே உறுதியான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியமை குறித்து இந்தக் கூட்டத்திலே பல உறுப்பினர்களும் தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

திட்டமிட்ட முறையில் விசாரணைகளில் தாமதங்கள் ஏற்படுத்தப்பட்டு மாணவர்கள் சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தித் தண்டனைகளில் இருந்து தப்பித்துச் செல்ல நிர்வாகம் வழிசமைத்துக் கொடுப்பதாகக் கருத்துக்கள் வெளியிடப்பட்டன. தண்டனைகளின் நோக்கம் மாணவர்களை விரோதிப்பது அல்ல. மாறாக தாம் செய்யும் தவறுகளை மாணவர்கள் உணர்ந்து எதிர்காலத்திலே செம்மையாகச் செயற்படும் வகையில் ஊக்குவிப்பதே என்பதுவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

கூட்டத்தின் இறுதியில் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து இன்று (நேற்று) திங்கட்கிழமை அன்று பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஓர் அடையாள வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபடுவது எனவும், நாளை (இன்று) செவ்வாய்க்கிழமை முதல் தொடர் வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபடுவதும் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

**கோரிக்கைகள்:-**

1. மோசமான செயல்களிலே ஈடுபட்ட மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இராஜினாமா செய்த கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் முன்வைத்த கோரிக்கை உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். பேராசிரியர் ரகுராம் தனது பதவி விலகலை வாபஸ் பெற்று மீளவும் பீடாதிபதிப் பொறுப்பை ஏற்பதற்கு உரிய ஒரு சூழலைப் பல்கலைக்கழக நிர்வாகம் பல்கலைக்கழகத்திலே ஏற்படுத்த வேண்டும்.

2. மாணவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக அண்மையில் இடம்பெற்ற பேரவைக் கூட்டத்திலே மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டும்.

3. மோசமான செயல்களிலே ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் உறுதியாக இருக்கும் போதிலும், அவற்றினைப் பயன்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் வேண்டுமென்றே கால தாமதங்களை ஏற்படுத்தல், வேண்டுமென்றே நிர்வாகத் தவறுகளை இழைத்தல் போன்ற செயன்முறைகள் மூலம் மீறல்களிலே ஈடுபட்ட மாணவர்கள் தண்டனையில் இருந்து தப்புவதற்கு நிர்வாகம் வழிசமைத்துக் கொடுக்கும் போக்கு உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்படல் வேண்டும்.

4. இரண்டு மாணவர்கள் கணிதப் புள்ளிவிபரவியல் துறையின் வாயிலில் இருந்த பூட்டை உடைத்தமை தொடர்பிலே இடம்பெற்ற விசாரணையை வேண்டுமென்றே தாமதமடையச் செய்த பல்கலைக்கழக நிர்வாகிகளுக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். அதேபோன்று கலைப்பீடத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை வேண்டுமென்றே இழுத்தடிப்போர் மீதும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலையீட்டினையும் கோருவதற்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

5. கலைப்பீடத்திலும் விஞ்ஞானப் பீடத்திலும் மோசமான செயல்களிலே ஈடுபட்ட மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதில் இருந்து தவறிய பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களின் மீது எமது ஆசிரியர் சங்கம் நம்பிக்கையை இழந்துள்ளது. எனவே, எல்லா வெளிவாரி உறுப்பினர்களும் தமது பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டும். புதிய உறுப்பினர்கள் பேரவைக்கு நியமிக்கப்பட வேண்டும். இது தொடர்பான சங்கத்தின் விண்ணப்பம் ஒன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும், உயர் கல்வி அமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

மேற்கூறிய ஐந்து கோரிக்கைகளையும் உள்ளடக்கிய கடிதம் ஒன்று பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கும், எல்லாப் பீடாதிபதிகளுக்கும் ஆசிரியர் சங்கத்தால், இன்றைய (நேற்றைய) கூட்டத்திலே மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் ஒன்றுக்கு அமைய அனுப்பிவைக்கப்பட்டது." – என்றுள்ளது.

---

## சிவமோகனை இடை...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வழக்குக்கான காரணம் ஏதும் இல்லை என்ற முடிவையும் நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டிருக்கின்றார்.

எனினும் எதிராளிகளுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்ட நீதிபதி வழக்கை பெப்ரவரி 22ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இந்தியா தரும் பாடம்

இந்தப் பிராந்தியத்தின் வல்லாதிக்க சக்தியும், உபகண்டமும், நமது நெருங்கிய அயல் தேசமுமான இந்தியா நேற்று முன்தினம் தன்னுடைய 76 ஆவது குடியரசு தினத்தைக் கொண்டாடியது.

இந்திய அரசமைப்பு தொடங்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைவதை குறிக்கும் தினம் அது.

உலகில் பாரம்பரிய ஜனநாயக பெருமை மிக்க ஒரு நாட்டின் ஒரு சாதனை மைல் கல்லாக இது கொண்டாடப்பட வேண்டிய நிகழ்வுதான்.

உலகின் ஐந்தாவது பெரும் பொருளாதாரமாக நிற்கும் இந்தியா, மிக விரைவில் அதில் மேலும் முன்நகரும் சாத்தியங்கள் தென்படுகின்றன.

கொழும்பில் நடைபெற்ற இந்திய குடியரசுத் தின நிகழ்வில் இந்தியாவின் துணைத் தூதர் கலாநிதி சட்ஜன்யல் பாண்டே கூறியமை போல இந்தியாவைப் பொறுத்தவரை ஜனநாயகம் என்பது வெறும் அரசியல் கட்டமைப்பு அல்ல, அதையும் தாண்டி இந்தியா ஜனநாயகத்தின் தாய். பாரம்பரியமான ஜனநாயக பண்புகள் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டு அது செழுமை பெற்று உயர்வாக விளங்கும் பெருமைமிக்க நாடு.

அந்த நாட்டின் ஜனநாயக வலிமைக்கு ஆதாரமாக இருப்பது அதன் அரசமைப்புத்தான். அந்த அரசமைப்பு நடைமுறைக்கு வந்து 75 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இச்சமயத்தில் அதன் பெருமையோடு அதன் மூலம் கிடைத்த பட்டறிவை உலகம் உணர்ந்து கொள்வது முக்கியமானது. அதுவும் ஜனநாயக கோட்பாட்டின் கீழான ஆட்சிமுறை கோலோச்சுவதாகக் கூறப்படும் நமது நாட்டில், ஜனநாயக பாரம்பரியத்தின் கீழ் சிறுபான்மையினர் அடக்கி ஒடுக்கப்பட்டு, அதன் விளைவாக ஒரு கொடூர இன யுத்தமே இரண்டரை தசாப்த காலம் இந்த நாட்டை சின்னாபின்னமாக்கிய அனுபவத்தோடு இருக்கின்றவர்களாகிய நாம் இந்திய ஆட்சி முறைமையிலிருந்து அதிகம் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கின்றது.

நமது அயல் தேசம் தனது அரசமைப்பு மூலம் சாதித்த அந்த உயர் நிலைமையை எமக்கு அனுபவப்பட்டறிவாக கொண்டு, அதனை முன்மாதிரியாகப் பெற்று, நம்மை நாம் திருத்திக் கொள்வதற்கு அயல் தேசத்தின் குடியரசு தினத்தின் அர்த்தம் நமக்கு உதவ வேண்டும்.

இந்திய அரசமைப்பு சமஷ்டி தன்மையை முழுமையாகக் கொண்டது. ஆனால் அதன் பெயரில் - அந்த அரசமைப்பின் நாமத்தில் - சமஷ்டி என்ற சொல்லாடல் இல்லை. ஆயினும் சமஷ்டிக்குரிய அடிப்படைகள் யாவும் அந்த அரசமைப்புக்குள் பொதிந்து கிடக்கின்றன.

மாகாண அல்லது மாநில அரசுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசு ஒரு தலைப்பட்சமாக மீளப் பெற முடியாத ஒரு நிலை இருக்குமானால் - அந்நிலை உறுதிப்படுத்தப்படுமானால் - அதுவே சமஷ்டி.

இந்திய அரசமைப்பை பொறுத்தவரை மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட அல்லது பகிரப்பட்ட அதிகாரங்கள் மத்திய அரசினால் மீளப் பறிக்கப்பட முடியாதவை என்ற உறுதிப்பாடு அதில் இருப்பதனால் அது ஒரு வகையில் சமஷ்டி முறைமையே. சமஷ்டி என்று பெயர் குறிப்பிடப்படாத ஒரு சமஷ்டிக் கட்டமைப்பு அது.

அத்தகைய அரசமைப்பு மூலமான உறுதிப்பாட்டை அந்த நாடு கொண்டிருப்பதனால்தான் ஜனநாயகத்தின் தாய் நாடாக அது இன்றும் விளங்குகின்றது. ஜனநாயகம் அங்கு தொடர்ந்து வெற்றிகரமாகக் கோலோச்சுதுகின்றது. ஜனநாயகத்தின் தாயகமாக அது பெருமை கொள்கின்றது.

ஜனநாயகத்தின் பெயரால் இலங்கையில் ஆட்சி அதிகாரத்தை வைத்திருக்கும் பெரும்பான்மைப் பேரினவாதிகள் இந்தியாவின் இந்தப் பாடத்தை முன்மாதிரியை கவனத்தில் கொள்ளுவார்களானால் இலங்கையிலும் ஜனநாயகம் மதிப்புக்குரியதாக மாறும்.

சகல இன மக்களும் அமைதியாக - சமத்துவமாக - சகோதரத்துவத்துடன், சௌஜன்யமான ஆட்சியை கொண்டு நடத்துவதற்கு வழி பிறக்கும்.

இந்திய அனுபவத்தை கவனத்தில் கொள்வதும், அதன் மூலம் நாட்டை சுபீட்சப் பாதையில் வழிநடத்துவதும் தென்னிலங்கையின் அரசுத் தலைமைகளுக்கு வருகின்ற பேரினவாதிகளைப் பொறுத்தது.










# கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் வருடாந்த சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி

கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் வருடாந்த சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் கோட்டே அங்கம்பிட்டிய மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதமர் ஹரிணி அமரசூரிய கலந்துகொண்டதுடன் சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளின் ஜயதிஸ்ஸ சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார்.

மேலும் விசேட அதிதிகளாக நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக மற்றும் முன்னாள் அமைச்சர் உதயகம்மன்பில உட்பட பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசு தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் ஊடக பிரதானிகளும் விசேட அதிதிகளாக கலந்து கொண்டமையும் இதில் விசேட அம்சமாகும்.

கொழும்பு ஊடகவியலாளர்கள் சங்கமானது மூன்றாவது தடவையாகவும் இந்த சிநேகபூர்வ ஒன்றுகூடலையும் கிரிக்கெட் போட்டியையும் நடாத்துகின்றது.

அத்துடன் கொழும்பு ஊடகவியலாளர்களின் நலன் புரி சேவைகளை மேம்படுத்தவே வருடாந்தம் இந்த நிகழ்வு நடத்தப்படுவதோடு இலங்கையின் முன்னணி ஊடக நிறுவனங்களை சேர்ந்த ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டிருந்தனர். மேலும், தமிழ் ஊடகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி சிரேஷ்ட ஊடகவியலாளர் சந்திரகாசன் ஞான பிரசாந்தனும் கலந்து கொண்டார்.

ஆரம்ப நிகழ்விற்கு வருகை தந்த பிரதமர் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் ஆகியோர் கொழும்பு ஊடகவியலாளர்களின் நலனையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதாக தமது உரைகளில் தெரிவித்திருந்தார். அத்தோடு ஏனைய விருந்தினர்களும் கொழும்பு ஊடகவியலாளர்களின் சேவையை பாராட்டி தமது கருத்துக்களை தெரிவித்திருந்தனர்..

தொடர்ந்து நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கொழும்பு ரைடர்ஸ் அணி வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

கோட்டை அங்கம்பிட்டிய விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கொழும்பு ஊடகவியலாளர்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சஞ்சீவ கால்லகே தலைமையிலான கொழும்பு ரைடர்ஸ் அணி வெற்றிபெற்றது.

இரண்டாம் இடத்தை கொழும்பு ஈகிள்ஸ் அணி பெற்றுக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு ரைடர்ஸ் அணி 3 ஓவர்களில் 23 ஓட்டங்களைப் பெற்றது

பதில் இன்னிங்ஸை விளையாடிய கொழும்பு ஈகிள்ஸ் அணியால் 22 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. அதன் படி கொழும்பு ரைடர்ஸ் அணி ஒரு ஓட்டத்தால் வெற்றி பெற்றது.

இந்த சுற்றுப் போட்டியின் சிறந்த பந்துவீச்சாளராக நுவான் யசங்க தெரிவானதோடு, பிரதீப் விக்ரமசிங்க சிறந்த துடுப்பாட்டக்காரராக தெரிவானார். மேலும் போட்டித் தொடரின் சிறந்த வீரராக உதித மகேஷ் தெரிவானார்.

பரிசளிப்பு வைபவத்தின் சிறப்பு விருந்தினராக முன்னாள் பிரதி சபாநாயகரும், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் முன்னாள் தலைவருமான திலங்க சுமதிபால கலந்து கொண்டு வெற்றிக் கிண்ணத்தை வழங்கி வைத்ததுடன், மேலும் பல சிறப்பு அதிதிகள் கலந்து கொண்டு அனைத்து உறுப்பினர்களுக்கும் பரிசில்கள் வழங்கி சிறப்பித்திருந்தனர்.


















# எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்த ஐக்கிய இராச்சியத்தின் விசேட குழு

ஐக்கிய இராச்சியத்தின் இந்தோ – பசுபிக் பிராந்திய அமைச்சர் திருமதி கெத்தரின் வெஸ்ட்டுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில், ஐக்கிய இராச்சியத்தின் இந்தோ – பசுபிக் பிராந்திய அமைச்சர் திருமதி கெத்தரின் வெஸ்டின் பிரத்தியேக செயலாளர் ரோப் கோர், இலங்கைக்கான பிரிட்டன் உயர்ஸ்தானிகர் அன்ரூ பட்றிக்ஸ், பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயத்தின் இரண்டாவது செயலாளர் அலெக்சாண்டர் ஸ்மித் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

ஐக்கிய இராச்சியத்தின் இந்தோ – பசுபிக் பிராந்திய அமைச்சர் திருமதி கெத்தரின் வெஸ்ட்டுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையே இந்த நாட்டின் பல்வேறு பொருளாதார, சமூக, அரசியல் விடயங்கள் தொடர்பாக நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளுவதற்குத் தேவையான ஆதரவை வழங்குமாறும், சுற்றுலாத்துறை தொடர்பாக ஐக்கிய இராச்சிய மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் இந்தத் தூதுக்குழுவினரிடம் கேட்டுக்கொண்டார்.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷன ராஜகருணா, முஜிபுர் ரஹ்மான், காவிந்த ஜயவர்தன மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்தன ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.



















# நாட்டின் பல பகுதிகளில் காற்றின் தரம் குறைந்தது

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் காற்றின் தரச் சுட்டெண் மோசமடைந்து காணப்படுவதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் புகை பரிசோதித்தல் நம்பிக்கை நிதியம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கொழும்பு 7, யாழ்ப்பாணம், திருகோணமலை, பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம் ஆகிய பகுதிகளில் 60 முதல் 118 இடைப்பட்ட அளவில் காற்றின் தரச் சுட்டெண் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, சுவாசப்பிரச்சினை உள்ளிட்ட பிரச்சினைகள் உள்ளவர்கள் மருத்துவ ஆலோசனையைப் பெறுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நுவரெலியாவில் காற்றின் தரச் சுட்டெண் சீரான நிலையில் உள்ளதாகவும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் புகை பரிசோதித்தல் நம்பிக்கை நிதியம் தெரிவித்துள்ளது.



# தேங்காய்க்குத் தட்டுப்பாடு; உணவகங்களை மூடும் நிலை

சந்தையில் பொருள்களுக்கு நிலவும் தட்டுப்பாடு காரணமாக உணவகங்களை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக உணவக உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.


தேங்காய், அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் பலவற்றுக்கு தற்போது தட்டுப்பாடு நிலவுவதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

எல்லா உணவுப் பொருள்களுக்கும் தேங்காய் பயன்படுத்தப்படுகிறது.

இந்நிலையில், தேங்காயின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

சில இடங்களில் அதிகூடிய விலைக்கு வாங்குவதற்குத் தேங்காய்கள் இல்லை.

எனவே இதற்கு உரிய தீர்வை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என உணவக உரிமையாளர்கள் கோரியுள்ளனர்.




# வாகன இறக்குமதி தொடர்பில் அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

வாகன இறக்குமதி தொடர்பான அதிவிசேட வர்த்தமானி வெளியிடப் பட்டுள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது

இந்த வர்த்தமானி 1969 ஆம் ஆண்டு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, பெப்ரவரி முதலாம் திகதி முதல் இறக்குமதி செய்யக்கூடிய வாகன வகைகள் பட்டியலிடப்பட்டுள்ளன.



# 6 கோள்கள் நேராக அணிவகுக்கும் காட்சியை அவதானிக்க முடியும்

சூரிய குடும்பத்தின் 6 கோள்கள் நேராக அணிவகுக்கும் அரிதான காட்சியை சில தினங்களுக்கு பார்வையிட முடியுமென கொழும்பு பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி மற்றும் யுரேனஸ் ஆகிய கோள்களை இவ்வாறு பார்வையிட முடியுமென கொழும்பு பல்கலைக் கழகத்தின் பௌதிகவியல் பிரிவின் வானியல், விண்வெளி அறிவியல் பிரிவின் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

வெள்ளி, சனி, வியாழன், செவ்வாய் ஆகிய கோள்கள் வெற்றுக்கண்களால் அவதானிக்கக் கூடியவாறு பிரகாசமாக தென்படும் எனவும் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

நெப்டியூன், யுரேனஸ் ஆகிய கோள்களை தொலைநோக்கியினுடாக பார்வையிடுவதற்கும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதாக பேராசிரியர் தெரிவித் துள்ளார்.

எதிர்வரும் 29 ஆம் திகதி வரை சூரிய அஸ்தமனத்திற்கு பின்னர் 90 நிமிடங்களுக்கு கோள்களை இவ்வாறு பார்வையிட முடியும் என பேராசிரியர் சந்தன ஜயரத்ன மேலும் தெரிவித் துள்ளார்.



# மீனவர்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் ரவிகரன் எம்.பியைச் சந்தித்துப் பேச்சு

**(விஜயரத்தினம் சரவணன்)**

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் அமைப்பாளரும், உலக மீனவ சமேளனத்தின் பொதுச்செயலாளருமான கேமன்குமார மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் சிங்கராசா பிரதாஸ், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனைச் சந்திதித்துப் பேசியுள்ளனர்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனது மக்கள் தொடர்பகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும், அப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது.



# புதிய விமானப்படை தளபதியாக வாசு பந்துல எதிரிசிங்க நியமனம்

இலங்கை விமானப் படையின் 20 ஆவது தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் வாசு பந்துல எதிரிசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

நாளை முதல் இந்த நியமனம் நடைமுறைக்கு வரவுள்ளது.

விமானப்படையின் தற்போதைய தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஸ எதிர்வரும் 29ஆம் திகதி ஓய்வுபெறவுள்ள நிலையிலேயே புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

# காலி சிறைச்சாலை மோதல்; ஆராய்வதற்கு குழு நியமனம்

காலி சிறைச்சாலையில் கைதிகள் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் பிரதி அத்தியட்சகர் தலைமையில் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் பேச்சாளர் காமினி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காலி சிறைச்சாலைகளின் செயற்பாடுகள் தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

காலி சிறைச்சாலையில் நேற்று முன்தினம் கைதிகள் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் காயமடைந்த 4 கைதிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோதலின் போது பிரதான சிறைச்சாலை அதிகாரி அலுவலகத்திற்கு சேதமேற்பட்டுள்ளதாகபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதிகளிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கமே மோதலுக்கு காரணமென பொலிஸார் தெரிவித்துள்ளார்.




# தீவுப் பகுதியில் நோயாளர் காவு சேவையில் ஈடுபட்ட படகு விற்பனைக்குச் செல்கின்றது


**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடல் கடந்த தீவுப் பகுதி நோயாளர் காவு சேவையில் ஈடுபட்ட படகு விற்பனைக்காக அறிவித்தல் விடப்பட்டுள்ளது.


யாழ்ப்பாணம் கடல் கடந்த தீவக மக்களின் நலன் கருதி இடம்பெறும் நோயாளர் காவு படகு சேவையை தற்போது வரைநில் கியூ மெடிக்கா என்னும் தொண்டு நிறுவனம் நடத்தி வருகின்றது. அந்த நிறுவனம் தன் வழங்கும் சேவையை நிறுத்துவதாக சுகாதாரத் திணைக்களத்திற்கு எழுத்தில் அறிவித்துள்ளது.

அதனை அடுத்து அந்தத் தொண்டு நிறுவனம் தனது உடமையில் உள்ள படகை விற்பனை செய்யவும் உள்ளூர் இணையத்தில் விளம்பரம் மேற்கொண்டுள்ளது.



இதனால் தீவகத்திற்கான நோயாளர் காவு படகுச் சேவை முற்று முழுதாகத் தடைப்படும் அபாயம் காணப்படுகின்றது.





# தலைமன்னார் - இராமேஸ்வரம் படகுச் சேவைக்கு போர்க்கால அடிப்படையில் தயாராகிறது தமிழகம்

**(ந.லோகதயாளன்)**

தலைமன்னார் இராமேஸ்வரம் இடையே படகுச் சேவையை ஆரம்பிக்கும் முகமாக இராமேஸ்வரத்தில் போர்க்கால அடிப்படையில் பணிகளை முன்னெடுக்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

இலங்கையின் தலைமன்னாரில் இருந்து இராமேஸ்வரத்திற்கு படகுச் சேவையை ஆரம்பிக்கும் நோக்கில் இராமேஸ்வரம் துறைமுகப் பகுதியை அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டு அதற்கான பணிகளை முன்னெடுக்கும் நோக்கில் இடம் தயார் செய்யப்படுகின்றது.

துறைமுகப் பகுதியின் இடத்தில் தற்போது மீனவ சங்கம் படகுகளைத் தரித்து வைத்திருப்பதனால் அப் படகுகளை உடனடியாக அங்கிருந்து அகற்றுமாறும், துறைமுக அபிவிருத்தி போர்க்கால அடிப்படையில் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்து தமிழ்நாடு அரசின் கடல்வாரிய அலுவலகம் துறைமுக அலுவலருக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளது.



humedica

10-01-2025

Dr.Ketheeswaran
Regional Director of health service
Northern Province
Jaffna

Dear Sir,

**DECISION ON THE FUTURE OF THE AMBULANCE BOAT SERVICE BETWEEN JAFFNA AND DELFT ISLAND**

We wish to inform you about the recent meeting held on 18th December 2024 with the Northern Provincial Governor and Chief Secretary regarding the ambulance boat service between Jaffna and Delft Island.

This service, established in 2006, has been managed and operated by Humedica Lanka until the end of 2024. However, as of April 2024, due to financial constraints, we proposed a collaboration with the government to jointly operate the boat. The vessel is in a deteriorated condition and requires urgent engine replacement and other repairs, with costs estimated at LKR 12 million.

During our initial meeting with the Governor, Chief Secretary and RDHS office in April 2024, we were requested to continue operating the boat until the end of the year. RDHS highlighted the lack of alternatives for providing ambulance services, which would leave the Delft community vulnerable if the service were paused. Despite the challenges, Humedica honored their request and continued operations until December 2024.

Subsequently, during our follow-up meeting on 18th December 2024, we discussed the future of the boat service. As our proposal to merge with a government authority was deemed unfeasible, and given the current condition of the boat, we concluded that it is no longer safe or advisable to transport patients. Continuing operations under these circumstances poses significant risks, for which Humedica Lanka would bear full responsibility.

Considering these factors, and following our meeting with the Governor, we have resolved to proceed with monetizing the boat. While this decision is not without its challenges, it is imperative to prioritize the safety of the community and maintain the integrity of our organization.

We deeply regret having to make this decision, as we understand the vital role the ambulance boat has played in supporting the community of Delft Island. Despite our continued efforts to sustain the service through government collaboration and alternative solutions, no feasible outcome has been achieved. We remain committed to assisting the Delft community in other meaningful ways and sincerely thank all stakeholders for their understanding and support during this challenging time.

Sincerely,

Dr. T.G.Prithiviraj
Chief Executive Officer
CC: Governor
CC: Chief Secretary






# கொழும்பில் கரை ஒதுங்கிய மர்மப் படகில் சட்ட விரோதமாக யாரேனும் நுழைந்தனரா?

(ந.லோகதயாளன்)

கொழும்பை ஒட்டி கரை ஒதுங்கிய மர்மப் படகின் மூலம் இந்தியாவில் இருந்து சட்ட விரோதமாக எவரேனும் நாட்டுக்குள் நுழைந்தனரா எனத் தேடப்படுகின்றது.

கொழும்பின் வடக்குத் திசையில் கடற்கரை ஓரத்தில் ஒரு இந்திய நாட்டுப் படகு நல்ல நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் கடற்படையினருக்கும் தகவல் வழங்கப் பட்டுள்ளது.

இப் படகில் இணைப்பு இயந்திரம் ஏதும் காணப்படாதபோதிலும் இதன் மூலம் எவரேனும் சட்ட விரோதமாக ஊடுருவி உள்ளனரா என ஆராயப்படுகின்றது.

திருட்டுத்தனமாக உள் நுழைந்தவர்கள் படகின் இயந்திரத்தையும் எடுத்துச் சென்றிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

அதேநேரம் இந்தப் படகில் நடிகர் விஜயகாந்தின் படம் பொறிக்கப்பட்டுள்ளமையால் படகு தமிழ் நாட்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.




# ஒருங்கிணைப்புக் குழுவின் அலுவலகம் வவுனியாவில் நேற்றுத் திறந்து வைப்பு



(கி.வசந்தன்)

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழு அலுவலகம் நேற்றுய் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா, மன்னார் வீதியில் வவுனியா தெற்கு பிரதேச செயலக வளாகத்தில் அமைந்துள்ள கட்டடத்திலேயே இந்த ஒருங்கிணைப்புக்குழு அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. நாடாளுமன்ற அமர்வு நாள்கள் தவிர்ந்த தினங்களில் மக்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றும் வகையில் இந்த அலுவலகத்தில் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.




# தோட்ட உதவி வெளிக்கள உத்தியோகத்தர்கள் தாக்கப்பட்டமைக்கு நீதி கேட்டுப் போராட்டம்!

## கொட்டகலை மவுண்ட்வேர்ணன் தோட்ட தொழிற்சாலைக்கு முன்







**(க.கிஷாந்தன்)**

தோட்டத்தில் பொது முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளர் ஆகியோரால் தாக்கப்பட்டுள்ள தோட்ட உதவி வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தினால் நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கொட்டகலை மவுண்ட்வேர்ணன் தோட்ட தொழிற்சாலைக்கு முன்னால் திரண்ட தோட்ட சேவையாளர்கள், மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்தும், பொலிஸார் உடனடி நடவடிக்கை எடுக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டினார்கள்.

எனவே, 'க்ளீன் ஸ்ரீலங்கா'போன்ற வேலைத்திட்டங்கள் வெற்றியளிக்க வேண்டுமானால் பக்கச்சார்பாக செயல்படும் பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு தெரியப்படுத்தப்படும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

கடந்த 23ஆம் திகதியே மேற்படி தாக்குதல் நடந்துள்ளது. பொது முகாமையாளரும், உதவி முகாமையாளரும் இணைந்து மேற்கொண்ட தாக்குதலில் பாதிக்கப்பட்ட உதவி வெளிக்கள உத்தியோகத்தர்கள் இருவரும் கிளங்கன் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர் என்று இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் பிரதித் தலைவர் எஸ். இளையராஜா தெரிவித்துள்ளார்.

நான்கு நாள்கள் கடந்தும், இது தொடர்பில் பொலிஸார் மந்த கதியிலேயே செயல்பட்டுள்ளனர் எனவும், இன்றைய (நேற்றைய) தினமே சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என தகவல் கிடைத்துள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

பொதுமுகாமையாளர் தலைமறைவாகி இருப்பதற்கு பொலிஸார் உடந்தையாக இருந்தனரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# அரிசித் தட்டுப்பாடு, விலையேற்றத்திற்கு கடந்தகால அரசாங்கங்கள்தான் காரணம்

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் குற்றச்சாட்டு




(கி.வசந்தந்)

ஃகடந்த காலத்தில் இருந்த அரசாங்கங்கள் நெல்லைச் சேமித்து வைத்து உரிய பொறிமுறையின் கீழ் மக்களிற்கு அரிசியை விநியோகிப்பதற்கான செயன்முறையை மேற்கொண்டிருந்தால் இவ்வகையான தட்டுப்பாடுகளும், விலை அதிகரிப்பும் ஏற்பட்டிருக்காது. எதிர்வரும் காலங்களிலே இவ்வகையான தட்டுப்பாடு ஏற்படாது என்பதுடன், அதற்கான நடவடிக்கையை நாங்கள் ஏற்படுத்தி இருக்கின்றோம் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாம் நாடாளுமன்றம் செல்கின்ற நாள்கள் மற்றும் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களிலே ஒருங்கிணைப்புக்குழு அலுவலகத்திலே எங்களது பிரசன்னம் இருக்கும். இந்நாள்களிலே மக்கள் தங்களுடைய குறைகளை இங்கு வந்து எம்மிடம் தெரிவித்துக் கொள்ள முடியும்.

பொதுவாகவே அரசாங்கத்தினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்ற கருத்து மக்கள் மத்தியிலே காணப்படுகின்றது. என்றாலும் கூட எமது இந்த ஐந்து வருட ஆட்சிக் காலத்தினுள் எங்களால் தெரிவிக்கப்பட்ட அனைத்து விடயங்களும் முழுமையாக நிவர்த்தி செய்யப்படும்.

குறிப்பாக நாம் ஆட்சியமைத்து மூன்று மாத காலப்பகுதிக்குள் நாம் வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் படிப்படியாக பல்வேறுபட்ட விடயங்களை தீர்த்து வைத்துக் கொண்டு இருக்கின்றோம்.

முப்பது வருட காலமாக ஏற்பட்ட மலையளவான பிரச்சனைகளை ஒர் குறிப்பிட்ட சில வாரங்களிலோ அல்லது குறிப்பிட்ட சில மாதங்களிலோ தீர்த்து வைப்பது என்பது எம்மாலும் முடியாது, யாராலும் முடியாது.

தேங்காய் விலை மற்றும் அரிசி விலை அதிகரித்துள்ளமைக்கு அரசின் மீது குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றது. நாம் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களே ஆகின்ற நிலையில் அரிசி விலை தொடர்பாக எம்மிடம் கேட்கப்படுகின்றது. கடந்த காலத்தில் இருந்த அரசாங்கங்கள் நெல்லைச் சேமித்து வைத்து உரிய பொறிமுறையின் கீழ் மக்களிற்கு அரிசியை விநியோகிப்பதற்கான செயன்முறையை மேற்கொண்டிருந்தால் இவ்வகையான தட்டுப்பாடுகளும், விலை அதிகரிப்பும் ஏற்பட்டிருக்காது.

எதிர்வரும் காலங்களிலே இவ்வகையான தட்டுப்பாடு ஏற்படாது என்பதுடன், அதற்கான நடவடிக்கையை நாங்கள் ஏற்படுத்தி இருக்கின்றோம். இதுவரை காலமும் குறிப்பிட்ட ஐந்து, ஆறு பெரும் வியாபாரிகளினாலேயே அரிசி விலை தீர்மானிக்கப்பட்டு வந்தது. அதன் விளைவை நாம் அனுபவித்துக் கொண்டு இருக்கின்றோம்.

எதிர்காலத்திலே இவ்வாறான விடயங்கள் இடம்பெறா. இதற்கான சகல முன்னாயத்தங்கள் அனைத்தையும் நாம் செய்திருக்கின்றோம். இந்த நெருக்கடியிலிருந்து மீண்டு எழுவோம் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

குறிப்பாக வன்னியிலே காணிப் பிரச்சினை பாரியளவில் காணப்படுகின்றது. எனவே இதனை தீர்க்கும் முகமாக தொடர்ச்சியான கலந்துரையாடலில் ஈடுபட்டு வருகின்றோம். கடந்த வாரம் கூட சுற்றாடல் அமைச்சரைச் சந்தித்து வன வள திணைக்களம், ஏனைய திணைக்களம் தொடர்பான முறைப்பாடுகளை மேற்கொண்டிருக்கிறோம். அத்துடன் அந்தத் திணைக்கள அதிகாரிகளுடனும் கலந்துரையாடி இருக்கின்றோம். அதன் அடிப்படையில் எதிர்வரும் காலத்திலே அதற்குரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வார்கள் என அவர்கள் வாக்குறுதி வழங்கியுள்ளனர்.

மக்களிற்காகவே நாம் இந்த ஆட்சியை அமைத்துள்ளோம். இந்த ஆட்சி பயனுள்ள ஆட்சியாக அமையும் என்பதை மக்கள் நம்ப வேண்டும். குறிப்பாக நாம் ஆட்சி அமைத்து மூன்று மாதங்கள் ஆகின்ற நிலையில் வரும் ஒரு வருட காலத்தில் நீங்கள் எதிர்பார்த்த நிலைமையை ஓரளவிற்கேனும் ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். என்றார்.

# மாடு மேய்ப்பதற்குச் சென்ற 19 வயது இளைஞன் மியான்குள காட்டுப் பாதையில் சடலமாக மீட்பு!

(கனகராசா சரவணன்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள மியான்குள காட்டுப் பாதையில் மாடு மேய்க்கச் சென்ற 19 வயது இளைஞன் ஒருவன் நேற்றுத் திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்

வட்டவான் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய ஜீவேந்திரன் சினேஜன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த இளைஞனுடன் 3 பேர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அந்தப் பகுதியில் மாடு மேய்க்கச் சென்றுள்ளனர். நேற்று மலம்கழிப்பதற்காக ஒதுங்கிச் சென்ற நிலையில் அவர் அங்கு வீழ்ந்து உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# இந்திய – இலங்கை பேச்சுவார்த்தைக்கு ராமேஸ்வரம் மீனவர்கள் வலியுறுத்தல்

இந்திய – இலங்கை மீனவர்கள் குறித்த பேச்சுவார்த்தையை நடத்த வேண்டும் என ராமேஸ்வரத்தில் நடைபெற்ற விசைப்படகு மீனவர்கள் ஆலோசனை கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற ரூபில்டன், டேனியல், சச்சின் ஆகியோருக்குச் சொந்தமான மூன்று படகுகளிலிருந்து 34 மீனவர்கள் மன்னார் கடற்பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினர் கடந்த ஞாயிற்றுக் கிழமை அதிகாலை அவர்களை கைது செய்தனர்.

34 மீனவர்கள் மீதும் எல்லை தாண்டி மீன்பிடித்தல், தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு பெப்ரவரி 5 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், ராமேஸ்வரம் மீன்பிடி இறங்குதளத்தில் மீனவ பிரதிநிதி சேசுராஜா தலைமையில் மீனவர்கள் ஆலோசனை கூட்டம் நேற்று திங்கள் கிழமை நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் நாகை, காரைக்கால் மாவட்டத்தில் உள்ள சிலர் அதிக குதிரை திறன் கொண்ட இஞ்ஜின்களை விசைப்படகுகளில் பொருத்தி உள்ளனர். அதிக குதிரை திறன் கொண்ட விசைப்படகுகள், இலங்கை மீனவர்கள் மீன்பிடி தொழில் செய்யும்போது அவர்களது வலைகளை சேதப்படுத்துவதால் இலங்கை கடற்படை அப்பாவி ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மீனவர்களை கைது செய்கின்றனர்.

இலங்கை மீனவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நாகை, காரைக்காலைச் சேர்ந்த அதிக குதிரை கொண்ட விசைப் படகுகள் பாக் ஜலசந்தி மற்றும் கச்சதீவு கடற்பகுதியில் மீன்பிடிக்காகமல் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்திய – இலங்கை இரு நாட்டு மீனவப் பேச்சுவார்த்தையை நடத்த வேண்டும், ராமேசுவரத்தில் இழுவை படகுகளை ஒப்படைத்து விட்டு மாற்றுத்தொழில் செய்ய விரும்பும் படகு உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும், ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த தீர்மானங்களை நிறைவேற்ற வலியுறுத்தி எதிர்வரும் வெள்ளிக் கிழமை ராமேசுவரம் பஸ் நிலையம் எதிரே கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

# மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு தேவை மத்திய அமைச்சருக்கு நவாஸ்கனி எம்.பி கடிதம்

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களையும், மீன்பிடி படகுகளையும் உடனடியாக மீட்க வேண்டும் என வலியுறுத்தி வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு ராமநாதபுரம் எம்.பி. நவாஸ்கனி கடிதம் எழுதி உள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டு கொண்டே இருக்கின்றனர். இதனால் மீனவர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு கொண்டிருக்கிறன. தற்போது 34 ராமேசுவரம் மீனவர்களையும் 3 மீன்பிடி படகுகளையும், இலங்கை கடற்படை சிறைபிடித்துள்ளது.

கைது செய்யப்பட்ட மீனவர்களையும் அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக இலங்கை மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண இரு நாட்டு மீனவர்களின் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க உடனடி ஏற்பாடு செய்ய வேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# பார்வையாளர்களைக் கவர்ந்த பிரதமர் மோடியின் தலைப்பாகை

கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு குடியரசு தின விழாவின் போதும் பல்வேறு மாநிலங்களின் தலைப்பாகைகளை பிரதமர் நரேந்திர மோடி அணிந்து வருகிறார்.

இந்த வரிசையில், பிரதமர் நேற்று முன்தினம் ராஜஸ்தானின் ஜோத்பூர் பகுதியை சேர்ந்த பந்தானி தலைப்பாகையை அணிந்திருந்தார். மஞ்சள் நிறத்திலான அந்த தலைப்பாகை பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.



விழா முடிந்த பிறகு பார்வையாளர்கள் அமர்ந்திருந்த பகுதிக்கு சென்ற பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நோக்கி கையசைத்து வாழ்த்து தெரிவித்தார்.

“அரசமைப்பு சட்டத்தை உருவாக்கிய அனைவருக்கும் தலைவணங்கி மரியாதை செலுத்துகிறேன். நாட்டின் ஜனநாயகம். கண்ணியம். ஒற்றுமையின் ஆணி வேராக அரசியலமைப்பு சட்டம் விளங்குகிறது.

இதை மேலும் வலுவாக்க குடியரசு தின விழாவில் உறுதி யேற்போம்’ என்று தனது சமூக வலைதள பதிவில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.



# கொங்கோவின் கோமா நகர் கிளர்ச்சியாளர்கள் வசமானது

ஆபிரிக்க நாடான கொங்கோ குடியரசின் மிகப்பெரிய நகரான கோமாவினை அந்நாட்டு கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளனர்.

இதனால் அங்கிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறியுள்ள நிலையில், அந்த பிராந்தியத்தில் யுத்த நிலைமை ஏற்படுவதற்கான சாத்தியங்கள் நிலவுவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கோமா நகரை கைப்பற்றியுள்ளதாகவும் இராணுவத்தினர் சரணடைய கால அவகாசம் வழங்குவதாகவும் கிளர்ச்சிக்குழு தலைவர் தெரிவித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தாக்குதல் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாகவும் கொங்கோ அரச படைகளை சரணடையுமாறு கிளர்ச்சியாளர்கள் வலியுறுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடதக்கது.





# பாகிஸ்தானில் கொள்கலன் லொறி வெடித்து விபத்து; ஆறு பேர் பலி

பாகிஸ்தானில் எரிவாயு ஏற்றிச் சென்ற கொள்கலன் லொறி வெடித்து ஆறு பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த சம்பவமானது நேற்று இடம்பெற்றுள்ளது.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம் முல்தான் மாவட்டம் ஹமித் புர்கனொரா பகுதியில் எரிவாயு ஏற்றிக்கொண்டு கொள்கலன் லொறி சென்றுள்ளது.

தொழிற்சாலைகள் அமைந்துள்ள பகுதி அருகே சென்றபோது எதிர்பாராத விதமாக கொள்கலன் லொறி வெடித்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் ஆறு பேர் உயிரிழந்துள்ளதுடன் 31 பேர் படுகாயமடைந்துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக் குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

மேலும், இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.01.2025

## மேஷம்

உங்கள் லட்சியங்களை அடைவதற்கு இது ஏற்ற நாள். இன்று வெற்றியும் வளர்ச்சியும் காணப்படுகின்றது. இன்று முக்கிய முடிவுகள் எடுக்கும் மன நிலையில் இருப்பீர்கள்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மறையான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். உங்களின் தரமான நேரத்தை இருவரும் ஒன்றிணைந்து செலவிடுவீர்கள்.

பணப்புழக்கம் சீராக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும். உங்கள் நிதிநிலைமை மேம்படும்.

இன்று ஆரோக்கியக் குறைபாடு ஏதும் இருக்காது. நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

## ரிஷபம்

இன்று மிகவும் அனுகூலமான நாள். உங்கள் லட்சியங்களை அடைவதற்கான அதிர்ஷ்டம் இன்று காணப்படுகின்றது. உங்களின் உற்சாகமான போக்கால் இன்று வெற்றி கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைக்கு பாராட்டு கிடைக்க நேரலாம். புதிய வேலை வாய்ப்புகள் நிறைந்து காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் அன்பான உண்மையான உறவை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிப்பதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மிதுனம்

இன்று ஆக்கப்பூர்வமான நாளாக அமையாது. சிறிய பயணம் மேற்கொள்ளவேண்டியிருக்கும். இன்று தைரியமும் உறுதியும் குறைந்து காணப்படும். உற்சாகமாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்கள் பணிகளை ஒழுங்கு முறையுடன் திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம். அதிகப் பணிகள் காரணமாக பணியில் தவறுகள் செய்ய நேரலாம்.

பாதுகாப்பற்ற உணர்வு மற்றும் மருட்சி காரணமாக உங்கள் துணையிடம் கவனமற்ற வார்த்தைகளை உதிர்ப்பீர்கள். இதனை தவிர்க்க வேண்டும். உங்கள் துணையுடன் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும்.

பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். பணம் சேமிப்பதையும் கடினமாக உணர்வீர்கள்.

இன்று தலைவலி மற்றும் தொண்டை வலி காணப்படும்.

## கடகம்

இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி காண விழிப்புடனும் கவனமுடனும் இருக்க வேண்டும். யதார்த்தமான அணுகுமுறை தேவை. இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகளில் தவறுகள் ஏற்படாமல் இருக்க நீங்கள் மிகவும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

இன்று உங்கள் துணையிடம் கவனமற்ற வார்த்தைகளை பேசுவீர்கள். உறவில் நல்லிணக்கம் ஏற்பட இதனை தவிர்த்தல் நல்லது.

அஜாக்கிரதை காரணமாக பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் பற்களில் கவனம் தேவை. உங்கள் உணவிலும் கவனம் தேவை.

## சிம்மம்

இன்று உங்களிடம் நம்பிக்கை நிறைந்திருக்கும். சிறந்த முடிவெடுக்கத் தக்க வகையில் உங்கள் மனநிலை சமநிலையில் இருக்கும்.

நீங்கள் உங்கள் உறுதியான மன நிலை காரணமாக பணியில் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் முழு ஆதரவைப் பெறுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் அன்பை வெளிப்படுத்தி பழகுவீர்கள். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் காணப்படாது. நீங்கள் திடமாக இருப்பீர்கள்.

## கன்னி

இன்று எதிர்பார்க்கும் பலன்கள் கிட்டாது. இன்று சரியான முடிவெடுக்க மனதில் தெளிவாக இருக்க வேண்டியது அவசியம். நெருக்கமானவர்களுடன் உரையாடும்போது கவனமாக இருக்க வேண்டும்.

இன்று பணியிடச் சூழல் கடினமாக இருப்பதாக உணர்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெறாது. இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடன் சிறு பிரச்சினைகள் ஏற்படும். வாக்குவாதங்கள் எழும். இதன் காரணமாக கருத்து வேறுபாடு ஏற்படும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். வீட்டைப் புதுப்பிப்பதற்காக பணத்தை செலவு செய்ய வேண்டியிருக்கும்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## துலாம்

இன்று பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும்.இதனை தவிர்க்க வேண்டும். மனதில் தெளிவு ஏற்பட நம்பிக்கையுடன் செயல்பட வேண்டியது அவசியம்.

பணியிடத்தில் குழப்பம் காரணமாக உங்கள் பணியில் தாமதங்கள் ஏற்படும். சக பணியாளர்கள் அதற்கு காரணமாக அமைவார்கள். எனவே திட்டமிட்டுக் கவனமாகப் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். இதனால் இருவரிடையே இடைவெளி அதிகரிக்கும்.எனவே அத்தகைய போக்கை தவிர்த்து சகஜமாக இருக்க வேண்டும்.

இன்று பணவரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகளும் பொறுப்புகளும் அதிகமாக காணப்படும்.

உங்கள் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.

## விருச்சிகம்

உங்கள் தினசரி செயல்களை ஒழுங்கு முறையுடன் ஆற்ற வேண்டும். தியானம் அல்லது ஆன்மீக செயல்களுக்கு நேரம் ஒதுக்க முயன்றால் பலன் கிடைக்கும்.

உங்கள் பணியில் வெற்றி பெற கடுமையாக உழைக்க வேண்டும். பணியிடப் பதற்றத்தை வீட்டுக்குக் கொண்டு செல்லாதீர்கள். இது குடும்ப அமைதியைக் கெடுக்கும்.

உங்கள் மனதில் காணப்படும் பாதுகாப்பின்மை உணர்வு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிக்க இயலாது.

இன்று நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. கூடுதல் செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய பணம் கடன் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 28.01.2025




இன்று சிறப்பான பலன்கள் கிடைக்கும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் உங்கள் முன் இருக்கும் சவாலான சூழ்நிலைகளை கையாண்டு ஆறுதல் பெருவீர்கள்.

இன்று பணியில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். இன்று பொறுப்புடனும் யதார்த்த அணுகுமுறையுடனும் இருப்பீர்கள். பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அன்பாக இருப்பீர்கள். இருவரும் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் சேமிப்பு அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். எதிர்பாராத வகையில் பண வரவு காணப்படும்.

உங்கள் மன தைரியம் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று சற்றே அனுகூலம் குறைந்து காணப்படும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அதன் மூலம் தன்னம்பிக்கை இழக்காமல் இருக்க முடியும். சம்பவங்களை லேசாகவும் நகைச்சுவை உணர்வுடனும் எற்றுக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இதனால் கவலை ஏற்படும். சகபணியாளர்கள் மூலம் சில பிரச்சினைகளை எதிர்கொள்வீர்கள்.

இன்று கட்டுப்பாட்டை இழந்து காணப்படுவீர்கள். இதனை உ'ங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். அனுசரித்துப் போகும் அணுகுமுறை தேவை.

தேவையற்ற செலவுகளால் கையிருப்பு பணம் கரையும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படும்.




இன்று சிறப்பான நாளாக இருக்கக் காண்பீர்கள். நீங்கள் உங்கள் செயல்களை சுமூகமாக ஆற்ற வேண்டும். இதன் மூலம் வாழ்வின் நன்மை தீமைகளை அறிய இயலும்.

உங்கள் கடின உழைப்புக்கு மேலதிகாரிகளிடம் நன்மதிப்பு பெறுவீர்கள். உங்கள் பணிகளை திறமையுடன் மேற்கொள்வீர்கள்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படலாம்.

இன்று நிதிநிலைமை சுதந்திரமாக காணப்படும். கணிசமான தொகை சேமிக்கும் வாய்ப்பு உள்ளது.

மன மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பொறுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டிய சூழ்நிலை காணப்படும். இன்று தேவையற்ற வாக்குவாதங்களில் கலந்து கொண்டு உங்கள் மதிப்புக்குக் களங்கம் ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் பணிகளைக் கையாளும்போது கவனமாக இருப்பது நல்லது. சக பணியாளர்களால் சில தொல்லைகள் ஏற்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

இன்று உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். இது உங்கள் இருவரிடையேயான உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். எனவே நஷ்டம் ஏற்படாமல் இருக்க திட்டமிட்டு சூழ்நிலையை சிறப்பாகக் கையாள வேண்டும்.

# 30 அடிப் பள்ளத்தில் பாய்ந்தது ஓட்டோ விபத்தில் சாரதியும் பயணியும் படுகாயம்



(க.கிஷாந்தன்)

ஹட்டனில் இருந்து மவுண்ட் ஜீன் சென்ற ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து குயில்வத்தைப் பிரதேசத்தில் 30 அடி பள்ளத்தில் பாய்ந்து.

இவ் விபத்தில் ஓட்டோச் சாரதியும் அதில் பயணித்த ஒருவரும் படுகாயம் அடைந்த நிலையில் வட்டவளை அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிசிக்காக நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து ஹட்டன் கொழும்பு பிரதான நெடுஞ்சாலையில் குயில்வத்தை பெட்ரோல் நிரப்பும் நிலையத்துக்கு அருகாமையில் நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளது என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

அதிவேகமாக சென்றதாலேயே விபத்து ஏற்பட்டுள்ளது என முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது என வட்டவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

விபத்தில் ஓட்டோ பெரும் சேதமடைந்துள்ளது.

விபத்து சம்பந்தமான விசாரணைகளை தொடர்ந்து வட்டவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.